# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
பங்குனி 7
ரபி. ஆகி. 9
ஞாயிறு (19-3-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 81
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60


# "உயிருக்கும் உடமைக்கும் யாழ்ப்பாணத்திலேயே பாதுகாப்பில்லை! பீதியின் மத்தியிலேயே தமிழர்கள் வாழ்கிறார்கள்"

## நமது நிலையைப்படம் பிடித்துக்காட்டுகிறது "சிட்னி மோர்னிங் ஹெரால்ட்"

"ஈழத்தமிழர்களுக்கு அவர்களது தாயகமான யாழ்ப்பாணத்தில் கூட பாதுகாப்பு இல்லை. அவர்கள் பீதிக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகிறார்கள். தமிழர்களிடையே உள்ள மேல்தட்டு வர்க்கத்தினரும் கூட இப்போது சுதந்திரத் தமிழ் ஈழக் கோரிக்கையை ஆதரிக்கும் நிலை தோன்றியுள்ளது. இந் நிலையில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவது அதிமுக்கியமானது."

—இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு இடித்துக்கூறியிருக்கிறது வெளிநாட்டு ஆங்கில ஏடு ஒன்று.

'சிறீலங்கா'வின் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவுஸ்ரேலியத்தலைநகரான சிட்னி நகருக்கு சென்றிருந்த சமயம் அந் நகரத்திலிருந்து வெளிவரும் அதிமுக்கிய ஆங்கில நாளேடான 'சிட்னி மோர்னிங் ஹெரால்ட்' ஈழத்தமிழர் பிரச்சினையை எடுத்துக்காட்டும் கட்டுரைகளை வெளியிட்டிருந்தது.

LEILA DE SILVA என்பவர் எழுதியுள்ள மேற்படி கட்டுரை வருமாறு:—

"இலங்கை சுதந்திரம் பெற்ற முப்பதாண்டுகால வரலாற்றில் கடந்த 1977 ஆகஸ்ட் மாதம் புதிய கொடுமையான அத்தியாயம் ஒன்று இணைக்கப்பட்டிருக்கிறது. தென்னிந்திய திராவிட மரபில் வந்தவர்களான 30 இலட்சம் சிறுபான்மைத் தமிழர்கள் 100 இலட்சம் பெரும்பான்மைச் சிங்களவர்களின் கைகளில் சிக்கி இரு வாரங்களாக மோசமான அவமானங்களையும் தாழ்வையும் அனுபவித்துள்ளனர்.

300 தமிழர் உயிரிழந்ததாகவும், 10,000 பேர் காயமுற்றதாகவும், 80,000பேர் சொத்திழந்ததாகவும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

—4-ம் பக்கம் பார்க்க

## கூட்டணி செயலகத்தில் பொலிசார் கெடுபிடி!

### 'ரோனியோமெஷினை' அகற்றமுயற்சி!

### யோகேஸ்வரன் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தை சென்ற திங்களன்று பொலிசார் முற்றுகையிட்டனர், அங்கிருந்த 'ரோனியோ' இயந்திரத்தை எடுத்துச்சென்றனர். இதுசம்பந்தமாக உடனடியாக யாழ். பா. உ. திரு. யோகேஸ்வரன் யாழ் பொலீஸ் அதிபருடன் தொடர்பு கொண்டதையடுத்து 'ரோனியோ' இயந்திரம் கூட்டணி தலைமைச் செயலகத்திடம் மறுபடியும் ஒப்படைக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழாவில் கல்வியதிபதி மகா தந்தில கலந்து கொள்ள விருப்பதை பகிஷ்கரிக்குமாறு கோரி யாரோ சில இளைஞர்கள் 'ரோனியோ' செய்யப்பட்ட துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததாக கேள்விப்பட்ட பொலிசார் சாவகச்சேரியை சேர்ந்த திசை வீரசிங்கம், யோகானந்தன், ரஞ்சிதன் ஆகிய மூன்று இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் 12-3-78ஞாயிறு இரவு கைது செய்தனர்"

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான திரு. திசை வீரசிங்கம், சென்ற அரசாங்க காலத்தில் நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக விசாரணையின்றி சிறைவைக்கப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விநியோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் மேற்படி துண்டுப்பிரசுரம் யாழ் கூட்டணி அலுவலகத்தில் உள்ள 'ரோனியோ' இயந்திரத்தில் தயாரிக்கப்பட்டதா என்பதை விசாரிப்பதற்காக கைது செய்யப்பட்டு விலங்கிடப்பட்ட இளைஞர்களுடன் பொலிசார் ஏ.எஸ்.பி. ஒருவர் தலைமையில் 13-3-78 திங்கள் காலை கூட்டணி தலைமைச் செயலகத்துக்கு படையெடுத்தனர். செயலகத்திலிருந்த பதில் நிர்வாகச் செயலாளர் திரு. தர்மலிங்கம், அலுவலக செயலாளர் திரு.க.சண்முகநாதன் (மணி) ஆகியோரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டது. அதையடுத்து 'ரோனியோ' இயந்திரத்தை கூட்டணி செயலகத்திலிருந்து 'சீல்' வைத்து பொலிசார் எடுத்துச்செல்ல முற்பட்டனர்,

இது விஷயம் உடனடியாக யாழ். பா. உ. திரு. வெ. யோகேஸ்வரனுக்குதெரிவிக்கப்பட்டதும் அவர் உடன் நடவடிக்கையெடுத்தார்; யாழ் பொலிஸ் அதிபருடன் திரு. யோகேஸ்வரன் தொடர்பு கொண்டதையடுத்து, எடுத்துச்சென்ற'ரோனியோ'

—4-ம் பக்கம் பார்க்க

## தந்தை செல்வா நினைவு கவிதை, கட்டுரைப் போட்டி

பரிசு ரூபா 500.00

விபரம் 2ம் பக்கம்

## காசி ஆனந்தன் நிதிக்கு லண்டன் தமிழர்கள் உதவி!

தமிழ் ஈழத்தின் தேசிய விடுதலைக் கவிஞர் காசி ஆனந்தனின் உதவிநிதிக்கு உதவும் பொருட்டு லண்டன் வாழ தமிழர்கள் ஆர்வத்தோடு நிதி சேகரித்து வருவதாக நமது லண்டன் நிருபர் இளங்கோ அறிவித்துள்ளார்.

லண்டனில் இயங்கும், ஈழ விடுதலை இயக்கம், தமிழர் முன்னேற்றக்கழகம், தமிழர் நடவடிக்கைக் குழு ஆகியன இந்த முயற்சியில் இறங்கியுள்ளன. கவிஞரின் நிதிக்கு ரூபா. 2,000க்கு குறையாமல்சேர்த்து அனுப்புவதற்கு இந்த இயக்கங்கள் திட்டமிட்டுள்ளன:

லண்டனில் தொடங்கப்படடுள்ள இந்த நிதி சேகரிப்பு பற்றி மேற்படி மூன்று இயக்கங்களும் கூட்டாக வெளியிட்டுள்ள துண்டறிக்கை யொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்:

"பாவலர்களின் உள்ள உணர்வுகளை போற்றும் தமிழினம் அவர்கள் வாழும் காலததில் அவர்களை வளமுடன் வாழவைப்பதில்லை; பாவலர் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி அழிந்தபின் அவர்களுக்கு விழா எடுப்பதும் சிலை வைப்பதும், வானளாவப் புகழ்வதும் அன்று தொட்டு இன்று வரை தொடர்கிறது.

"ஆண்டதமிழினம் மீண்டும் ஆள நினைப்பது தவறு?" என இடிமுழக்கம் செய்யும் பாவலர் காசி ஆனந்தனுக்கும் வறுமைதொடரலாமா? கூடாது; என அன்பர்கள் பலர் முடிவெடுத்து அறிஞர் அண்ணா வழியில் பாவலரை வாழ வைக்க தமிழ் ஈழத்தில் நிதி திரட்டப்படுகிறது: இலண்டன் வாழ் தமிழன்பர்கள் இச்சிறந்த செயலுக்குத் தங்கள் பங்கினையும் செலுத்திட வேண்டுகிறோம். திரட்டப்படும் பணம் காசி ஆனந்தன் நிதிக்குழுவினருக்கு விடுக்கப்படும்"



தந்தை செல்வாவுக்குப் பின்னர், தமிழ் ஈழம் அனைத்தும் ஏற்றுக்கொண்டிருக்கும் தமிழ் தேசிய இனத்தின் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கு திருகோணமலைத் தமிழ் மக்கள் அண்மையில் திருகோணமலை முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் மலர்க்கிரீடம் அணிவித்து தமது பாசத்தைக் கொட்டினர். திருகோணமலை வாழ் தமிழ் மக்கள் கொட்டிய அன்பில் திளைத்தபடி திரு. அமிர்தலிங்கம் உணர்ச்சிவசமாக [illegible] காட்சி இது


—தித்திக்கும் சிறுகதைகள்
—தேன் மணக்கும் கவிதைகள்
—முத்தனைய கட்டுரைகள்
—முழுச் சிரிப்புத் துணுக்குகள்
—இத்தனை விருந்துகளுடன்

காசி ஆனந்தனின்
'சிறைச்சாலை இனிக்கும்'
கட்டுரையுடன்
இப்போது எங்கும்
விற்பனையாகிறது

சுடர்
CHUDAR
(மாசி இதழ்)
விலை ரூபா
ஒன்று மட்டுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழத் தந்தை மூதறிஞர் அமரர் செல்வா நினைவுப்போட்டி

## பரிசு ரூபா 500-00

தமிழீழத்தந்தை மூதறிஞர் அமரர் செல்வா அவர்களின் எண்பதாவது பிறந்த நாள் எதிர்வரும் 31-3-1978 ஆகும். அதையொட்டி சுதந்திரனில் செல்வா நினைவுக் கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்த முடிவு செய்துள்ளோம்:

### போட்டி விபரங்கள்:

#### கட்டுரைப் போட்டி

தலைப்புக்கள்:—

"செல்வா—ஒரு சகாப்தம்"

"இலங்கை அரசியலில் செல்வா ஏற்படுத்திய தாக்கங்கள்"

"செல்வா கண்ட கனவு நனவாக நாம் என்ன செய்ய வேண்டும்?"

நிபந்தனைகள்:

(1) மேற்கண்ட தலைப்புக்களில் ஏதாவது ஒன்று பூல்ஸ்காப்தாளில் 5 பக்கங்களுக்கு மேற்படாமல் கட்டுரைகள் எழுதப்பட வேண்டும்.

(2) கட்டுரைகள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'செல்வா நினைவுக் கட்டுரைப் போட்டி' என்று குறிப்பிட்டு ஆசிரியர் சுதந்திரன், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது கட்டுரைக்கு 150 ரூபாவும், இரண்டாவது கட்டுரைக்கு 100 ரூபாவும் மூன்றாவது கட்டுரைக்கு ஐம்பது ரூபாவும் பரிசுகளாக அளிக்கப்படும்.

#### கவிதைப் போட்டி

தலைப்புக்கள்:—

"செல்வா பிறந்திலரேல்......"

"செல்வாவை சிந்தையிலேவை"

'செல்வாவின் நாமத்தைச் சொல்லச் சொல்ல'

நிபந்தனைகள்;

(1) மேற்கண்ட அடிகளில் ஏதாவது ஒன்றைக் கொண்ட கவிதைகள் புனையப்பட வேண்டும்.

(2) கவிதைகள் எந்த வகையினதாகவும் எழுதப்படலாம். ஆனால் 32 வரிகளுக்கு மேற்படக் கூடாது.

(3) தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது சிறந்த கவிதைக்கு நூறு ரூபாவும், இரண்டாவது. மூன்றாவது கவிதைகளுக்கு தலா ஐம்பது ரூபாவும், பரிசாக அளிக்கப்படும்.

பொதுவான சட்டதிட்டங்கள்;—

(1) சுதந்திரன் ஆசிரியரும், அவர் நியமிக்கும் குழுவும் அளிக்கும் தீர்ப்பே இப்போட்டியில் முடிவானதும், இறுதியானதாகவும் இருக்கும்.

(2) போட்டியில் இலங்கையிலும், கடல்கடந்த நாடுகளிலும் எந்தத் தமிழனும் பங்கு பற்றலாம்.

(3) போட்டிக்கு அனுப்பப்படும் கட்டுரைகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கவிதை. கட்டுரைகள் சுதந்திரனில் பிரசுரமாகும்

(4) போட்டி முடிவுத்திகதி 5-4-1978.

(5) பரிசு பெற்றோருக்குரிய பரிசுத்தொகை 1978. ஏப்பிரல் 26ம் திகதி நடைபெறும் தந்தை செல்வாவின் முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் தமிழர் விடுதலை இயக்கத் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களால் வழங்கப்படும்.

(6) போட்டிக்கு அனுப்படும் கட்டுரை, கவிதைகளுடன் பின்வரும் படிவம் நிரப்பப்பட்டு இணைக்கப்பட வேண்டும்.

**தந்தைசெல்வா நினைவுப் போட்டி**
**- 1978 -**

சுதந்திரன் நடத்தும் மேற்படி போட்டியில் கலந்து கொண்டு போட்டிக்கான எனது கவிதையை/கட்டுரையை அனுப்பி வைக்கிறேன். கட்டுரை/கவிதை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பெயர்:

முகவரி:

ஒப்பம்

திகதி:

குறிப்பு: தந்தை செல்வா நினைவுப் போட்டிக்கான பரிசுத் தொகையை லண்டன் ஈழ விடுதலை இயக்கமும் லண்டன் தமிழர் முன்னேற்றக் கழகமும் கூட்டாக அளிக்க முன்வந்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

—ஆசிரியர்




மாணிதாஸ்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

கே: 5-3-78இல் வெளியான சுதந்திரன் பத்திரிகையில், இரண்டாம் பக்கத்தில் வெளியான 'மணியனுக்கு ஏன் தடுமாற்றம்' என்ற பகுதியில் 'சிறீலங்கா' என்று மணியன் எழுதியதை எதிர்த்து எழுதியிருந்தீர்கள். அதே பத்திரிகையில் "வீர வியட்நாமின் பெருந்தலைவரே வருக" என்னும் தலையங்கத்தின் கீழ் சிறீலங்காவின் எதிர்க்கட்சித்தலைவர் என்று எழுதப்பட்டிருந்ததே தயவு செய்து இதற்கு விளக்கம் தாருங்கள்!

ப: நாம் இலங்கை ஒரே நாடல்ல என்ற அடிப்படையில் 'தமிழ் ஈழம்' என்றும் 'சிறீலங்கா' என்றும் குறிப்பிட்டு எழுதுகிறோம். திரு. அமிர்தலிங்கத்தை தமிழ் ஈழத்தின் முதல்வராகவே கருதுகிறோம்—அதே சமயம் அவர் (சிங்கள) சிறீலங்கா பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்குவதையும் சுட்டிக்காட்டுகிறோம். இலங்கை இரு நாடுகள் என்ற எண்ணத்தைநமது மக்களின் நெஞ்சங்களில் புகுத்துவதற்காக தமிழ்ஈழம் சிறீலங்கா என்று குறிப்பிடுகிறோம். ஆனால் மணியனின் நிலை அதுவல்ல; அவர் தமிழ் ஈழத்தையும் உள்ளடக்கிய முழு நாட்டையுமே "சிறீலங்கா" வென்றும், "சிறீலங்காத்தமிழர்கள்" என்றும் குறிப்பிடுகிறார். இதற்கே நமது ஆட்சேபம்! இலங்கையை இரண்டு நாடுகளாக திரு. மணியன் தமது கட்டுரையில் குறிப்பிடுவாரானால், அதாவது தமிழ் ஈழம் வேறு சிறீலங்கா வேறு என்ற அடிப்படையில் தமது கட்டுரையை எழுதுவாரானால் மனமுவந்து வரவேற்போம்.

ஃ

சீ. கிருஷ்ணன்,
யாழ்ப்பாணம்.

கே: தென்னிந்திய தமிழ் பத்திரிகைகள்சரி, தென்னிந்திய கலைஞர்கள் சரி, இலங்கைத் தமிழரை, இலங்கைத் தமிழர்கள் பற்றிய செய்திகளை வேண்டுமென்றே மறைக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்ளுகிறீர்களா?

ப: 'வேண்டுமென்றே' மறைக்கிறார்கள் என்று கூறுவதை விட அக்கறையற்று இருக்கிறார்கள் என்பதே பொருத்தம்; அக்கறையுள்ளவர்களுக்குக்கூட எம்மைப் பற்றிய சரியான தகவல்கள் கிடைக்காமலிருக்கலாம்!

கே: இலங்கைவந்த சிவாஜியும் ஜெமினியும் (நடிகர்கள்) இலங்கை தமிழர்களுக்கு புத்தி கூறும் தோரணையில் நாட்டுக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்களே...?

ப: ஆமாம், தமிழ்மக்கள் தாம் வாழும் நாடான தமிழ் ஈழத்துக்கு விசுவாசமாக இருப்பதன் காரணமாகவே அதன் விடுதலைக்காக உழைக்கிறார்கள்!

ஃ

செல்வி. கே; பரமேஸ்வரி,
கரவெட்டி.

கே: சுதந்திரன் [illegible] [illegible] பத்திரிகையா? அல்லது தமிழர் விடுதலைக்கூட்டணிப் பத்திரிகையா?

ப: இரண்டுமல்ல; தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்திருக்கும் ஒரு சுதந்திரமான பத்திரிகை!

ஃ

ஆனந்தராஜ்,
உடுப்பிட்டி. வடக்கு.

கே: எங்கள் சுதந்திரன் பத்திரிகையை படிக்கும் போது எங்கள் உள்ளத்தில் புதிய ஆர்வமும் தமிழ் வீர உணர்ச்சியும் உண்டாவதன் மர்மம் என்ன?

ப: சுதந்திர உணர்ச்சியின் ஊற்றாக சுதந்திரன் விளங்குவது தான்!

ஃ

சி. சிறீதரன்,
யாழ்ப்பாணம்.

கே: நல்லூர் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் அவர்களுடைய கொழும்பு இல்லம் அவருடைய சொந்த வீடா அல்லது வாடகை வீடா?

ப: வாடகை வீடு!

ஃ

கே. இராசையா,
புற்றடி விநாயகர்,
மண்ணாகண்டல்.
முத்துஐயன்கட்டு.

கே: சன்சோனி கமிசன் விசாரணையை அடுத்து யூ.என்.பி.அரசாங்கம்பொலிசார் மீது நடவடிக்கை எடுக்குமா? அல்லது விசாரணை பைல்களை உள்ளே வைக்குமா?

ப: பொறுத்திருந்து பார்ப்போம்!

ஃ

வீ. ரமேஷ்,
எஸ். சிவநேசராஜா,
நெல் கொள்வனவு நிலையம்,
ஏறாவூர்—1.

கே: தமிழ்ஈழ இலட்சியப் போராட்டத்தில் நாம் பங்கு கொண்டு பணியாற்றும் போது சில சுயநலப் பேர் வழிகள் எம்மைக்காட்டிக்கொடுக்க முயல்கிறார்கள் இவர்களை என்ன செய்யலாம்?

ப: காலம் அவர்களைக் கவனித்துக்கொள்ளும்!

ஃ

ஆர். குணசீலன்,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

கே: தமிழ்மக்களுக்கு இதுவரை இடதுசாரிகள் செய்தது என்ன?

ப: தமிழினத்தைக் கொல்லும் சட்டமான கொல்வின் அரசியல் சட்டத்தை உருவாக்கி நிறைவேற்றிவைத்ததுதான்!

ஃ

க. நேசராஜா,
நாவிதன் வெளி,
கல்முனை.

கே: பொத்துவிலாரைப் போல இன்னும் யாராவது எமது கட்சியில் இருக்கிறார்களா?

ப: இதற்கு காலம்தான் பதில் சொல்லவேண்டும்!

ஃ

வி. ஜெகராசசேகரன்,
சரசாலை தெற்கு.

கே: பாலஸ்தீன விடுதலைக்காக குரல்கொடுக்கும் ஜனாதிபதி ஜே. ஆர், தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக ஏன் குரல் கொடுக்கவில்லை?

ப: 'ஊருக்காகவே உபதேசம்—உனக்கல்லடி'!

ஃ

செல்வன். மா.வில்வக்கோன்,
அச்சுவேலி வடக்கு.

கே: இந்திய மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் பற்றி ஜே. ஆர். என்ன நினைத்திருப்பார்?

ப: 1983ம் ஆண்டை நினைத்து ஒரு பெருமூச்சுவிட்டிருப்பார்!

ஃ

சு. கலோ,
றோயல்கல்லூரி,
கொழும்பு—7.

கே: 'தமிழ்ஈழம்' கேட்டும் நீர் ஏன் கொழும்பில் படிக்கிறீர் என்று சிலர் என்னிடம் கேட்கிறார்களே?

ப: இந்தியாவுக்கு சுதந்திரம் கேட்ட காந்தியடிகளும் நேருவும், கிருஷ்ண மேனனும் மற்றும்பல தலைவர்களும் லண்டனில்தானே படித்தார்கள்?

கே: கொழும்பு பஸ்களில் தமிழை ஏன் கொலைசெய்கிறார்கள்?

ப: தமிழர்களையே ஆடு மாடுகள்போல வெட்டிக் கொலை செய்தவர்களுக்கு தமிழைக் கொலைசெய்வது ஒரு பெரிய காரியமா?

ஃ

செல்வி: க. அன்பரசி,
மட்டுநகர்.

கே: 26-02-78 சுதந்திரன் பத்திரிகை மட்டுநகருக்கு வரவில்லையே, காரணம் என்ன? அத்தோடு மார்கழிதை சுடர் சஞ்சிகையும் இங்கு வரவில்லை? ஏன்?

ப: இதற்குப் பொறுப்பாளிகள் நாம் அல்ல—உங்கள் ஊர் சுதந்திரன் சுடர் விற்பனையாளர்தாம்!

ஃ

ராஜன் பெர்னாண்டோ,
பெரியகடை,
மன்னார்.

கே: தமிழ் ஈழ விடுதலை இயக்கம் உலகில் எந்தெந்த நாடுகளில் இருக்கிறது?

ப: லண்டன், அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா, நோர்வே, ஜெனீவா, இந்தியா, துபாய், இப்படி பல நாடுகளில் இருக்கின்றன.

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தமிழகமே! எங்கே செல்கிருய்?

விக்டர் செல்வரத்தினம்

"கலை மனிதனுக்காக இலக்கியம் மனிதனுக்காக—என்ருல் அந்த கலையும், இலக்கியமும் மனிதனின் வாழ்வை செம்மைப் படுத்தி அவனை உயர்வடையச் செய்யவேண்டும்"

—'சிற்பி' வெள்ளரிவண்டி மதிப்புரையில்

சிற்பி. சிந்தனையைக்கிளறிவிட, யாழ் நகரில் வலம் வந்தேன் பேருந்து நிலையத்தின் ஒருபக்கம்புதுப்பொலிவுடன் தோன்றியுள்ள கடைக்களை காண மகிழ்வாகத்தானிருந்தது காரணம்—

● புதியப் பொலிவுடன் கடைகள் இருப்பது—

● இக்கடைகள் யாவற்றிலும் புதிய புதிய சஞ்சிகைகளும்,நாவல்களும் கண்ணைப் பறிக்கின்ற அழகு—

அதே நேரம் உள்ளம் வேதனையின் எல்லையையும் தொட்டது. புதிதாக இக்கடைகள் தோன்ற ஏதுவாயிருந்த அந்த துயரச்சம்பவங்கள்—கூடவே தொங்கும் அந்த தமிழகசஞ்சிகைகளின் இலக்கிய தரம்;

"அந்தக்கலையும். இலக்கியமும் மனிதனின் வாழ்வை செம்மைப்படுத்தி" என்ற வார்த்தைகளுக்கும் இச் சஞ்சிகைகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள 'இடைவெளி' எந்த ஒரு உண்மையான இலக்கிய ரசிகர்களையும் ஒரு கணம் சஞ்சலப்படவைக்கும்.

'கல்கி' தன்னை மறைத்துக்கொள்ள, ஒன்று போக இரண்டென, பத்தோடு மேலும் ஒன்றென, தினமணிக்கதிர், குமுதம், விகடன் ஆகியவற்றுடன் அவற்றின் குட்டிகளென, ஏதோ வெட்டிப்பிடுங்குவேன் என பறை சாற்றி களத்தில் குதித்துள்ள மணியனின் 'இதயம் பேசுகின்றது' சாவியின் 'குங்குமம்' இரண்டும் கூட ஒன்றையும் பெரிதாக செய்யவில்லை. எல்லோரும் விளையாடும் அந்தக் கவர்ச்சி போட்டியில் "சஸ்ட்மென் வர்ணம்" தெளித்துள்ளார் மணியன். எப்பவும் சலர் படத்திற்கு சற்று கூட்டம் அதிகம்'வசூல் மன்னனிடம்' பாடம் கற்றவர் அல்லவா?

கலைமகள் தீபம் இரண்டையும் தவிர மற்றவை எல்லாம் ஆபாசத்தின் எல்லைகளைத் தொடுவதில் நானு, நீயா முந்தி என்ற பந்தயத்தில் நிற்கின்றன.

தமிழகத்தின் திரைப்படங்கள் மக்களை பாழாக்குவது போதாவென்று, தமிழக சஞ்சிகைகளும் அந்த ஆபாசக் குட்டையில் தமிழ் மக்களை தள்ளி விளையாட்டுப் பார்க்கின்றன.

ஒரு காலம், நாம் மறக்கவில்லை. மறக்கமாட்டோம்.

உறங்கி கிடந்த எம் சுதந்திர உணர்வை தட்டியெழுப்பியவை, கப்பல் ஓட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன், சிவகங்கைசீமை, நாடோடி மன்னன், மகாதேவி......

இவற்றில் நாம் ஓர் சிவாஜியையோ, எம்.ஜி.ஆரையோ, எஸ். எஸ். ஆரையோ காணவில்லை,

கண்டதெல்லாம் வ. உ. சியை. நாட்டைகாக்கதியாகஞ்செய்தகட்டபொம்மனை ஓர் அமரதாரா. சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன், நெஞ்சினலைகள், பொன்விலங்கு, அல்லி—

இவைகள் மிளிரும் காலத்தால் அழியா காவியங்கள்.

இப்படி சரித்திர காவியங்களை தந்த தமிழகமா இன்று கேவலமான தரித்திரப் படைப்புகளை தருகின்றது?

வாசகர்கள் புதிய தாகம் பிடித்தலைகிருர்கள். அவர்களின் தாகத்தை தீர்க்க நாம்எழுதுகிறோம் என்கிருர்கள்.

தமிழக மக்களின் தாகம் எதுவோ நாமறியோம்!

ஆனல் நாம் நிச்சயமாக "தாகவெறி கொண்டலைகிரோம்". அந்த தாகம் இன விடுதலை.

தமிழ் இனத்திற்கென தனியொரு சமத்துவ சுதந்திர நாட்டை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள நாம், எதிர்பார்ப்பது, விரும்புவது சுதந்திர வேட்கைமிக்க படைப்புகளை, நம்மண்ணின் வாசனை, சமுதாயத்தின். இனத்தின் மரபு இவற்றினை வெளிக் கொணரக்கூடிய படைப்புகளை!

இலங்கை வரலாற்றில் ஓர் திருப்பு முனையில் நாம் நிற்கின்றோம்.

ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஓர் மகத்தான வளர்ச்சி முனையில் உலக மகா இலக்கியங்களுக்கு சவால் விடும் எல்லையில் உள்ளோம் நான் மட்டும் கூறவில்லை, "கலைமகள்" இதோ தருகின்றது.

"அன்றியும் இலக்கிய உணர்வு விடயத்தில் அங்கே காணப்படும் ஆர்வமும் எழுச்சியும் இன்றைய நிலையில் தமிழ் நாட்டைவிட அதிதீவிரமாக இருப்பதைக் காணலாம்... கடந்த ஆறு ஏழு ஆண்டுகளாக ஈழத்தில் தோன்றிய நாவல்கள் தமிழ் நாட்டையும் மிஞ்சிவிட்டன"

– சோ. சி., (கலைமகள்)

ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள், நம் இலக்கிய வளர்ச்சியின் கணிப்பிற்குமாக அண்மையில் வெளியான நம்மவர்களின் படைப்புகள் இதோ.

மெழுகுவர்த்தி. சுமைகள், புதிய சுவடுகள், யானை—

நான்கும் நான்கு கோணங்கள்—

மெழுகுவர்த்தி காலவெள்ளத்தில் வரலாறு அள்ளப்பட்டு விடக்கூடாதே என்ற உணர்வில் வெளியான ஓர் நின்றெ இயக்கத்தினை முன்னையதாக்கங்களை,சர்ந்தர்ப்ப சூழ்நிலைகள் எதிர்மாருக இருக்கும் நிலையிலும் எடுத்துரைத்துள்ள தன்மை தமிழ் இலக்கிய வரலாற்றில் தனியிடத்தை பெற்றுள்ளதை எவருமே மறுக்க இயலாது.

சுமைகள், ஒருசோகக்காவியம். ஒரு வாலிபனின் மனக்குமுறலை வெளிக்கொணர்கின்றது. பாதச்சுவடுகள் நம்சமுதாயத்தின் இடையே இன்னமும் மடியாமல் நிற்கும் சாதி எனும் விதியால் சீரழிந்த இளஞ்சிட்டுகளின் கண்ணீர் காவியம் யானை, ஒரு மனிதன், ஒரு யானை, இவற்றிற்கிடையே ஒரு தூய காதலால் எழும் போராட்டத்தை ஓர் புதிய கோணத்தில் நின்று இலக்கிய படைப்பாக்கியுள்ளது.

இவை இன்றைய நிலை...

இன்று மட்டுமல்ல... அன்றும் நம் படைப்புகள் சோடை போகவில்லை.

"மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள் நாவல் எழுதிய அதே காலத்தில் கொழும்பு நகரத்தில் வழக்கறிஞர். தொழில் பார்த்த சித்திலெவ்வை என்பவர் 'அசன் பே சரித்திரம' நாவலை எழுதி தமிழ் இலக்கியத்திற்கு பெருமை தந்தார். 1885ல் வெளியான இந்நாவல் வேதநாயகம் பிள்ளையவர்களின் இரு நாவல்களைவிட (பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி) சிறந்தோங்கி நின்றது"

—சோ. சிவபாத சுந்தரம்

இவ்வாறு தனிச்சிறப்பு பெற்ற ஈழத்து தமிழ் இலக்கிய உலகம் இன்று விடுதலைவித்திற்கு உரமூட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டினதும் விடுதலைப்போரில் இலக்கியப் பணி மகத்தானது.

சோவியத் ஒன்றியம், சீன, அமெரிக்கா, பிராஞ்சு போன்ற நாடுகளின் விடுதலை போருக்கு இலக்கிய உலகம் ஆற்றிய சேவை இன்றும் உலகம் போற்றக் கூடியவையாக உள்ளது. அதே நிலை இங்கும்.

அந்த புதிய உணர்விற்கும் வேகத்திற்கும் அணைபோடவா தமிழக சஞ்சிகைகள் உதவ வேண்டும்?

உங்களிடம் உதவியை கேட்க மனம் நாடுகின்றது. ஆனல் கடந்த காலத்தின் வரலாறு...... எங்களுக்காக பரிந்து பேச நீங்கள் முற்பட்ட நேரங்களை காண

—5-ம் பக்கம் பார்க்க

# இராஜமனேகரன் கட்டுரைக்கு ஓர் எதிர்ப்புக்குரல்; சர்ச்சை கிளப்புகிருர் சாலை இளந்திரையன்!

சென்னையில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு பற்றி அம்மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டவர்களில் ஒருவரான இராஜமனேகரன் எழுதிய கட்டுரைகளை சுதந்திரனில் பிரசுரித்திருந்தோம். அக்கட்டுரைத் தொடரின் இறுதியில் தமது கட்டுரை குறித்து அபிப்பிராயங்களை வரவேற்பதாக கட்டுரை ஆசிரியர் தெரிவித்திருந்தார். அதன் அடிப்படையில் மனேகரன் கட்டுரைகள் பற்றி தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சாலை இளந்திரையன் அனுப்பியுள்ள கடிதக் கட்டுரையை இங்கு வெளியிட்டுள்ளோம். பத்திரிகாதர்மத்தின் அடிப்படையிலேயே டாக்டர் சாலையாருடைய கருத்துக்களை இங்கு அப்படியே தந்திருக்கிறோம் என்பதையும் சுதந்திரன் வாசகர்களுக்கும் சாலையாருடைய கடிதக் கட்டுரையில் அலசப்படுபவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.

ஆசிரியர்: சுதந்திரன்
யாழ்ப்பாணம்.

அய்யா,

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாட்டுக்காகத் தமிழகம் வந்து திரும்பிய திரு. இராஜமனேகரன் சுதந்திரனில் எழுதிய கட்டுரையைப் படித்தேன். கட்டுரையிலே மிருக்கும் துடிப்பும் இருந்தாலும் போதிய நிதானம் இல்லை. சில செய்திகள் தவருக உள்ளன; சில விவரங்கள் போதிய அளவு அழுத்தமாகச் சொல்லப்படவிலலை.

குரும்பசிட்டி நண்பர் ஓர் ஆசை அளவாக வைத்திருந்த கரடுமுரடான எண்ணத்துக்கு "உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்" என்ற இனிய பெயரைக் கொடுத்து, அதற்கு ஒரு தலைமையையும் கொடுத்தவர் சாலை இளந்திரையன்; லண்டன் பி. பி. சி. மூலமும், உலக இதழ்கள் மூலமும், லண்டன் முரசு சதானந்தன் மூலமும் உலகின் பலநாட்டுத் தமிழர்களோடுதொடர்புகொண்டு, இயக்கத்தை உருவாக்கி வளர்த்து வலுப்படுத்திய வரும் அவரே. ஆனலும்,—"தேசாபிமானம்" காரணமாகவோ என்னவோ, ஈழத்துக் கனகரத்தினத்தையே இயக்கத்தின் "எல்லாமாக"க் காட்டியுள்ளார் மனேகரன். பெருமை யாருக்கு என்பது முக்கியமல்ல; உண்மைகள் செம்மையாகத் தரப்படுதல் வேண்டும்.

"மாநாட்டின் 18-12-77 நிகழ்ச்சிகள் யாவும் இந்திமொழியில் ஒலிபரப்பான தேசிய கீதத்துடன் நிறைவுற்றன" என்கிருர் மனேகரன். "அமைச்சர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் தேசிய கீதத்துடன் முடிவடைய வேண்டும்" என்பது ஒரு சாதாரன அரசியல் சம்பிரதாயம். இதை இவர் பெரிதுபடுத்தியிருக்க வேண்டியதில்லை. தவிர, இந்தியத் தேசிய கீதம் இந்திமொழியில் உள்ளது என்பதும் தவறு; "ஜனகணமன" எனத் தொடங்கும் தேசிய கீதம் வங்காளி மொழியில் உள்ளது.

இயக்க மாநாட்டில் பங்கு கொள்ள மறுத்துத் தனிக் கூட்டம் போட்டுப் பேசிய

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# உட்சுவர் தீற்றட்டும்!

சிறுபான்மையினர் பாதுகாப்பு, பாரபட்சத் தவிர்ப்பு என்பனவற்றுக்கான ஐ. நா.வின் துணை ஆணைக் குழுவுக்கு இலங்கையும் ஒரு பிரதிநிதியாக முதல்தடவையாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆணைக் குழுவுக்கு இலங்கையின் பிரதிநிதியாக 'சிறீலங்கா' ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களின் அருமைச் சகோதரர் திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தனா கியூ. சி. தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்!

இதைக்கண்டு அழுவதா சிரிப்பதா என்று நமக்கு விளங்கவில்லை; சிறுபான்மையினர் பாதுகாப்பு, பாரபட்சம் தவிர்ப்பு என்பனவற்றுக்கான ஐ. நா. ஆணைக்குழுவில் பிரதிநிதித்துவம் வகிப்பதற்கு இலங்கைக்கு யோக்கியதையும் தகுதியுமுண்டா? அதற்கான தார்மீக பலம் உண்டா? என்பதையெல்லாம் சிந்திக்காமல் அந்த புனிதமான பணியை நிறைவேற்றும் குழுவுக்கு இலங்கையையும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்!

குற்றவாளியையே நீதிபதியாக நியமிப்பது போல—திருடனையே திருட்டை விசாரிக்கும் காவலனாக அமர்த்துவது போல கடந்த முப்பது ஆண்டுகளாக சிறுபான்மை இனத்தின் உரிமைகளைப்படிப்படியாக அபகரித்தும், இனப்பாரபட்சங்களை தொடர்ந்து அமுல் நடத்தியும் சிறுபான்மை இனத்தை ஒரேயடியாக ஒழித்துக்கட்ட 'இனக்கொலை' நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருகின்ற இலங்கைக்கு, சிறுபான்மையினர் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட உலகமன்ற ஆணைக்குழுவில் பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கிறது.

எனவே இலங்கைப் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தனாவின் பணி, முதலில் இலங்கையிலுள்ள தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ளது. உட்சுவர் தீற்றியே புறச்சுவர் தீற்ற வேண்டும் என்று கூறுவார்கள். அந்த அடிப்படையில்—முதலில் இலங்கையில் சிறுபான்மைமக்களுக்கு எதிராக கடைப்பிடிக்கப்பட்டுவரும் சகல இனமத பாரபட்சமான சட்டங்களையும் ஒழித்துக்கட்டி, அவர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்புக்களையும் வழங்கிவிட்டுத்தான் திரு. ஜெயவர்த்தனா ஐ. நா. ஆணைக்குழுவுக்குள் நுழைய முடியும்; ஏனைய நாடுகளிலுள்ள சிறுபான்மை பிரச்சினைகள் குறித்து அவரால் தட்டிக் கேட்கமுடியும்!

அப்படியின்றி—இலங்கையில் தொடர்ந்து பாரபட்ச சட்டங்களையும் சிறுபான்மை இன ஒழிப்பு நடவடிக்கைகளையும் வைத்துக்கொண்டு அதே சமயம் இலங்கையின் பிரதிநிதி ஐ. நா. ஆணைக்குழுவில் எழுந்துநின்று, ஏனைய நாடுகளிலுள்ள பிரச்சினைகள் பற்றிப் பேசுவாரானால், "ஏனையா, உம்முடைய நாட்டில் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? முதலில் அதைத்திருத்திவிட்டு, வேறு பிரச்சினைகளைப்பற்றி பேசுங்கள்" என்று இலங்கைப் பிரதிநிதியின் முகத்தில் அறைவது போல் ஏனைய நாட்டுப்பிரதிநிதிகள் கேட்கமாட்டார்களா? கரிபூசமாட்டார்களா?

இலங்கையின் ஆகப்பெரிய கொடூரமான பாரபட்சம் நிறைந்த சட்டம்—1956ம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டமாகும். இந்தப் பாரபட்சமான சட்டம் அரசியல் அமைப்பில் இருக்கின்றவரை — ஏனைய பாரபட்சங்கள் அனைத்தும் இருந்து கொண்டேயிருக்கும். எனவே பாரபட்சங்களின் மூலவேராக விளங்கும் சிங்களம் மட்டும் என்றசட்டம் முற்றாக அகற்றப்பட்டு, அல்லது திருத்தப்பட்டால் மட்டுமே — இருமொழிகளுக்கும், இரு இனங்களுக்கும் சமத்துவம் என்ற நிலையை ஏற்படுத்த முடியும்!

இதையும்விட பயங்கரமான பாரபட்ச நடவடிக்கை — சிறுபான்மை இனத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கை — தமிழ் தேசிய இனத்தின் மரபுவழித் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை சிங்கள அரசாங்கமே ஊக்குவித்து நடத்தி — சிறுபான்மை மக்களின் தாயகத்தை சூறையாடுவதாகும்.

மேற்கண்ட இரு பாரபட்சங்களையும்—சிறுபான்மை இனத்துக்கு எதிரான நடவடிக்கைகளையும் முற்றாகக் கைவிட்டு — தமிழ் தேசிய இனம் தனது தாயகத்தில் தன்னைத்தானே ஆள்வதற்கு சமாதானமான முறையில் இலங்கை அரசு வசதிசெய்து கொடுத்தாலொழிய, வேறு எந்த முகத்துடனும் இலங்கைப்பிரதிநிதி ஐ.நா. ஆணைக்குழு முன்னால் சென்று தலைநிமிர்ந்து பேசமுடியாத சூழ்நிலையே ஏற்படும்! இலங்கைப் பிரதிநிதிக்கு ஏனைய நாடுகள் கரிபூசவே செய்யும்!

எனவே ஐ. நா. மன்ற ஆணைக்குழுவின் இலங்கைப் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தனா கியூ சி. அவர்கள் முதலில் உட்சுவர் தீற்றி முடித்துவிட்டு, பின்னர் புறச்சுவர் தீற்ற புறப்படட்டும்.

# உயிருக்கும் உடமைக்கும்...

—1-ம் பக்கத் தொடர்

25,000 தமிழர்கள் தெற்கிலிருந்து ஆயுதப்படைகளின் கடுமையான காவலுடன் தங்கள் மரபுவழித்தாயகத்தை நோக்கிச்சென்றனர்; (இதை "அச்சத்திலேற்பட்ட விடுதலை" என்று ஒரு தமிழ்த்தலைவர் வர்ணித்தார்.) சிங்களவர் பெருவாரியாக வாழும் இடங்களில் தனித்து வாழ்ந்திருந்த தமிழர்கள் தங்களுக்கு பாதுகாப்பு இருப்பதாக மனநிறைவு அடையுமட்டும் காடுகளில் ஒளித்திருந்தனர்.

தமிழ் பெண்கள் கற்பழிக்கப்பட்ட சம்பவங்கள், அவர்களின் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது; ஆண்கள் அடி, உதைபட்டது—சிறுவர்கள் மிரட்டப்பட்டது போன்ற நிகழ்ச்சிகள் எராளம்.

இதே போன்ற ஒரு இனக் கலவரத்தின் காரணமாக 20 ஆண்டுகளுக்கு முன்னரும் தமிழர்கள் வாங்கிக் கட்டினர்; அப்போதும் தங்கள் பொருட்களையும் சொத்துக்களையும் விட்டு விட்டு ஓடினர்; ஆயினும் எவ்வளவு பயங்கரமான நினைவுகளானாலும், அவற்றைக் காலம் மறக்கடித்துவிடுவதுண்டு; இதனால் அன்று ஓடிச்சென்ற தமிழர்கள், மீண்டும் தென்னிலங்கை வந்து சிங்களவர்களுடன் வாழ்ந்து வந்தனர்.

ஆனால் இந்தத்தடவை வன்முறைச்சம்பவங்கள் மிகவும் மோசமாக இருந்தன. தமிழர்கள் தங்கள் தாயகமாக கருதுகின்ற யாழ்ப்பாணத்திலேயே—அவர்கள் அகதிகளாக அடைக்கலம் தேடி ஓடிய அங்கேகூட, தமிழர்களின் உயிருக்கும், உடமைகளுக்கும் போதியபாதுகாப்பு இருக்கவில்லை!

ஒரு சம்பவத்தின்போது, பொலீசார் சுட்டு, மூன்று தமிழர்கள் மாண்டனர்; யாழ்ப்பாணத் தெருவீதிகளிலிருந்து பொலிசார் வாபஸ் பெறப்பட்டு, இராணுவம் ரோந்துக்கு விடப்பட்டு, ஊரடங்கு போடப்பட்ட பின்னர்தான் யாழ்ப்பாணத்தில் நிலைமை கட்டுக்கடங்கியது.

பயங்கரம் நிலவிய நாட்களில் ஏற்பட்ட உடற்காயங்கள் மட்டும் யாழ்ப்பாணத்துமக்களிடம் இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கவில்லை; சமாதானம் ஏற்பட்டு பல மாதங்களாகியும்கூட, இனக் கலவரத்தின்போது தமிழர்கள் அனுபவித்த கொடுமையும், பட்ட அவமானங்களும், துன்பங்களும் அவர்களது உள்ளங்களில் ஒருவகையான வெறுப்புணர்வை வளர்த்துள்ளது.

தங்கள் குடும்பங்களை யாழ்ப்பாணத்துக்கு கூட்டிச் சென்ற தமிழ் அரசாங்க ஊழியர்கள் இப்போது தங்கள் வேலைத்தலங்களுக்குத் திரும்பியபோதிலும், அவர்களுடைய குடும்பங்கள் ஊரிலேயே தங்கிவிட்டன. யாழ்பாணத்துக்கு அடுத்தபடியாக கொழும்புதான் தங்களுக்குப் பாதுகாப்பான இடமென்று தமிழர்கள் கருதுகிறார்கள். தமிழர்கள் கொடார்ந்து பீதியின் மத்தியிலேயே வாழ்ந்துவருகின்றனர்.

குழப்பம் பற்றி ஒரு சிறு சூசகம், அல்லது வதந்தியை கேட்டாலே அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு மூட்டை முடிச்சுக்களுடன் செல்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் பாடசாலைக் களியாட்டத்தின் போது நடந்த ஒரு சிறு சம்பவமே இனக்கலவரத்தின் தொடக்கமாக இருந்த போதிலும், பிரச்சினை நெடுங்காலமாகவே கொந்தளித்துக் கொண்டிருந்து வந்திருக்கிறது.

தமிழர்கள் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாகக்கருதுகிறார்கள். சிங்களவர்களுக்கு எவ்வளவு தூரம் உரிமை உண்டோ, அதேயளவு உரிமை தமக்கும் உள்ள ஒரு நாட்டில், தாம் அடிமைப்படுத்தப்பட்டிருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். ஒருகாலத்தில் அரசாங்க சேவையிலும் வேலைகளிலும் தொழில்களிலும் பல்கலைக் கழகங்களிலும் தமிழர்களுக்குரிய பங்குக்கு மேலாகவே அவர்களுக்கு கிடைத்ததுண்டு.

இவையெல்லாம் அவர்களுக்குப் பாதகமாக இன்று அமைந்து விட்டது. மொழிச் சட்டங்கள்மூலம், அரசாங்க சேவைக்குள் சிங்களவர் நுழைவதைவிட தமிழர்கள் நுழைவது கடினமாக்கப்பட்டுவிட்டது. அப்படியின்றிக் கஷ்டப்பட்டு நுழைந்த தமிழர்களுக்கும் பதவி உயர்வு மறுக்கப்படுகிறது.

பல்கலைக்கழக பிரவேசங்களில், தாம் கடுமையாகப் படித்து திறமையாகச் சித்தியடைந்தும் தமக்கு இடம் கிடைக்கவில்லையென்று தமிழ்மாணவர்கள் கருதுகின்றனர். தமிழர்களிடையேயுள்ள புத்தி ஜீவிகளும் தொழில் நுட்பவியலாளரும் தங்களுக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் எதிர்காலத்தைதேடி இலங்கையைவிட்டு வெளியேறிவிட்டனர்.

தங்கள் நிர்வாகத்தை தாங்களே கவனித்துக்கொள்வதற்கு ஓரளவு சுயாட்சி இருந்தாலே போதும் என்று கருதியிருந்த தமிழர்களிடையேயுள்ள மேல்தட்டு வர்க்கத்தினரும்கூட, தமிழ் இளைஞர்களும் தமிழ் அரசியல்வாதிகளும் முன்வைத்திருக்கும் "சுதந்திர இறைமையுள்ள தனித்தமிழ் ஈழ அரசு" கோரிக்கையை ஆதரிக்கும் அளவுக்கு யாழ்ப்பாணத்தில இன்று பாரபட்சங்களுக்கு எதிரான உணர்வும் தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்ற உணர்வும் மிகவும் உக்கிரமாக காணப்படுகிறது.

இந்த இலட்சியத்துக்கு (தனித்தமிழ் ஈழத்துக்கு) இருக்கும் அமோகமான ஆதரவு சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலின் மூலம் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. இந்தத் தேர்தல் முடிவினால், தேசிய அரசுப்பேரவையில், சிங்கள ஆதிக்கமுள்ள ஐக்கிய தேசியக்கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் மோதுகின்ற ஒருநிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால்— சுதந்திர அரசு என்ற தமது இலட்சியத்தை தமிழர்கள் எப்படி அடையப்போகிறார்கள்?

"நாங்கள் எமது இலட்சியத்தை நிறைவேற்ற சமாதான வழிகளையே நாடுவோம்; இந்த வழிகள் தோல்வியுற்றால், நாம் வேறு கடுமையான வழிகளை நாட வேண்டிய நிலைக்குத்தள்ளப்படுவோம்" என்று தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபரும், எதிர்க்கட்சிதலைவருமான திரு. அமிர்தலிங்கம் பிரகடனம் செய்தார்.

"ஒரு சுதந்திர ஈழ அரசு வலிமையுடையதாக விளங்குமா?" என்று நான் ஒரு தமிழ்த்தலைவரிடம் கேட்டேன்.

"எங்கள் நாட்டைவிட குறைந்த வளமுள்ள குட்டி நாடுகள் பல நம்மால் சுதந்திரமாக வாழ முடியும் என்பதை உறுதிசெய்கின்றன. தமிழர்கள் கடின உழைப்பாளிகள்; அவர்களது நம்பிக்கையும் உறுதியும், இறுதியில் வெற்றிபெறும்." என்று அவர் பதிலளித்தார்.

இலங்கைத் தமிழர்கள் சுதந்திரத் தமிழ் ஈழம் அமைத்தால், அவர்கள் பாக்குத் தொடுவாய்க்கு 12மைல்களுக்கப்பாலுள்ள ஐந்து கோடித் தமிழர்களுடன் சேர்ந்து, சிங்களவர்களை விழுங்கி விடுவார்கள் என்ற அச்சம் சிங்களவர்களுக்குண்டு.

திருமதி பண்டாரநாயகாவிடமிருந்து ஏராளமான பிரச்சினைகள் யூனியன் றிச்சார்ட் ஜெயவர்த்தனாவின் தலைமீது விழுந்துள்ளன. பொருளாதார நெருக்கடி, பண வீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியன அவற்றுள் சில. ஆனால் தமிழர் பிரச்சினைக்கு உடனடியாகவும் அவசரமாகவும் தீர்வு காணப்படவேண்டியதே இவற்றுள் முக்கியமானது.

## கூட்டணி செய...

—1-ம் பக்கத் தொடர்

இயந்திரத்தை மறுபடியும் பொலிசார் கூட்டணித் தலைமைச் செயலகத்தில் ஒப்படைத்தனர்.

சாதாரண நேரத்தில் தமக்குரிய மறுக்கொணா ஜனநாயக உரிமையின் கீழ் துண்டுப் பிரசுரமொன்றை யாரோ சிலர் வெளியிட்டதாக 'தர்மிஷ்டம்' பேசும் ஆட்சியில் பொலிசார் இத்தனை கெடுபிடிகளில் ஈடுபட்டுள்ளனர். கொழும்பிலிருந்துவந்த உத்தரவின் பேரிலேயே இந்தக் கெடுபிடிகள் நடப்பதாகத் தெரிகிறது.

## ஆவணி வெறி—

—5-ம் பக்கத் தொடர்

அன்றியும் கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஆலயங்கள் பெரும்பாலானவற்றில் சிங்கள பௌத்தர்களே அதிகளவு வழிபாடுசெய்துவந்தனர் என்பதை அறியும்போது, கும்பிட்ட தெய்வத்தையே கொள்ளையடிக்கும் மக்கள் என்பதும், மஞ்சள் துண்டிற்காகப் பெற்றதாயின் கழுத்தையே அறுத்த மாபாவிகள் இவர்கள் தான் என்பதும் தெளிவாக்கப்படுகின்றது. இத்தகுபாவிகளின் செயல்களைக் கண்டும், கேட்டும், தீரவிசாரித்துஅறிந்தும் நடவடிக்கை எடுக்காது நாடாள்வோர் இருப்பின் அந்நாடு என்றுமே ஒரு நல்லாட்சியை நிலைநிறுத்தமாட்டாது. இதனை நன்குபுரிந்து இந் நாட்டில் உள்ள தமிழ் மக்கள் ஒன்றுபட்டசக்தியாக ஒரேலட்சியத்திற்காக தம்மை அர்ப்பணித்தாற்றான் தமிழ்ப்பண்பாட்டுடன் தமிழன் என்றாவது ஒருநாளில் தலை நிமிர்ந்து வாழ முடியும்.

—தியாகமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி வெறியாட்டத்தின்போது 19 இந்து ஆலயங்களை சூறையாடினர் பௌத்த சிங்கள இனவெறியர்கள்!

## இந்து இளைஞர் பேரவை விபரம் திரட்டுகிறது!

இலங்கை இந்து இளைஞர் பேரவை 1977 ஆகஸ்ட் கலவரத்தால், பஞ்ச சீலம் பேசும் பௌத்தமதக் காடையர்களின் கைவரிசைக்கு இலக்காகிச் சூறையாடப்பட்டும் சிதைத்துச் சின்னாபின்னமாக்கப்பட்டும், தீக்கிரையாக்கப்பட்டும் சீர்கெட்ட ஆலயங்களைப்பற்றி அரசுக்கும் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்தி மேற்கொண்டு ஆவன செய்ய முன்நிற்கின்றது. இதன் முதற்பணியாக இலங்கையின் பல பாகங்களிலும் நடந்த ஆலயசேதங்கள் பற்றிய விபரத்தை சேகரித்துவருகின்றது.

இவ்விதம் கிடைத்த விபரங்களின்படி ஆகஸ்ட் கலவரத்தின்போது காடையர்கள் கைவரிசைக்கு இலக்கான ஆலயங்கள் வருமாறு:-

அனுராதபுரம் கதிரேசன் கோவில்.

அனுராதபுரம் பிள்ளையார் கோவில்.

அனுராதபுரம் விவேகானந்த சபா.

அனுராதபுரம் நுவரக்குளம் பிள்ளையார் கோவில்.

கல்கமுவ பிள்ளையார் கோவில்.

மாகோ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்.

குருணாகல்சைவமகாசபை;

பொல்காவலை. கதிரேசன் கோவில்.

வறக்காப்பொலை ஸ்ரீ முத்துமாரியம்பாள் கோவில்;

கேகாலை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்.

மாவனல்லை ஸ்ரீ கதிரேசன் கோவில்.

பேராதனைசர்வகலாசாலை குறிஞ்சிக் குமரன் கோவில்.

கட்டுகாஸ்தோட்டை ஸ்ரீசித்திவிநாயகர் கோவில்.

உக்குவளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்.

திருகோணமலை பன்குளம் எல்லைக்காளி கோவில்.

திருகோணமலை-கோட்டை வாசல் பிள்ளையார் கோவில்.

திருகோணமலை - பாலையூற்று ஞானவைரவர் கோவில்.

திருகோணமலை - கித்துள் ஊற்று பிள்ளையார் கோவில்.

திருகோணமலை-மங்களபுரி பத்தினி அம்மன் கோவில்.

இவைதவிர மலையகத்தில் தோட்டப் பகுதிகளிலும், மற்றும் இடங்களிலும் தமிழ் மக்கள் வழிபட்டுவந்த சிறு சிறு ஆலயங்களையும் அவற்றுக்கு சார்ந்த இடங்களையும் காடையர் நாசம் செய்துள்ளனர். இன்று பலஇடங்களிலும் இந்த ஆலயசொத்துக்களை அபகரிப்பதிலும் பயமுறுத்தியும், நியாயமற்ற விலையிலும் துட்டுப்பணத்திற்கு சொந்தமாக்குவதற்கும் ஒவ்வொருவர் முயன்று வருவதை நேரேகாணவும், கேட்கவும் கூடியதாகவுள்ளது. இது எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம் என்ற நோக்கமாகவே இருப்பதாக எல்லோரும் கூறுகின்றனர்.

மேலும் பல ஆலயங்களில் இந்து மதகுருமார் பஞ்சசீலப் பௌத்தக் காடையர்களால் அடித்து விரட்டப்பட்டதாகவும், சித்திரவதைக்குள்ளானதாகவும், உடைமைகளை கொள்ளை கொடுத்ததாகவும் அறியும் பொழுது புத்தபெருமானின் பெயரால் இந்நாட்டை ஆள்வோரும், இந்நாட்டில் வாழ்வோரும் எவ்வளவுபெரிய பசுத்தோல் போர்த்த புலிகளாயிருப்பார்கள் என்பது கண்டு உணரக்கூடியதாயுள்ளது.

—4-ம் பக்கம் பார்க்க

## இந்தியத் தமிழ..

—3-ம் பக்கத் தொடர்

ஆசைப்படுகின்றேன்... எங்கள் துயரங்களை எங்களுடன் பகிர்ந்த நாட்களை காண ஆவலுள்ளவனாயுள்ளேன் .... எங்கே... எங்கே என உங்கள் இதழ்களை தேடுகின்றேன்... ஏதோ 'தர்மத்திற்'காக ஒரு வரி இரண்டு வரி... 'சிலோன் தமிழர் பிரச்சினை' அவ்வளவு தான்,

உதவத்தான், உங்களுக்கு தயக்கமெனினும், ஏன் இந்த குத்தல்? தினமணிக்கதிர். 'பொன் மணி' விமர்சனத்தில்—

"திருப்தியில்லாதது தமிழ், கேரளீயச் சிங்களீயம்" என்கிறார்,

நுளம்பிற்கும், கொசுவிற்கும் என்ன வித்தியாசம் எனத் தெரியாமல் 'இலங்கை வானொலியில் நுளம்புத் தொல்லை" எனக் கூறுகிறார்கள். 'நுளம்பு' என்றால் என்னவென ஒரு கேள்வியை வாசகர் கேட்டுள்ளார் குமுதத்தில்; மிக திருப்தியான பதில் தந்துள்ளனர் குமுதத்தினர். இதே கேள்வி தினமணிக்கதிருக்கு போயிருந்தால். "கேரளீய சிங்களீயத்தில் ஓர் மிருகம் எனக் கூறுவாரோ? அப்பட்டமான செந்தமிழ், மண்மணம், பொன்மணியில்வீசுகின்றது. இது விளங்காவிடில் தமிழக மட்ராஸ்டமிழ், அவை எம் புட்டுக்கு விளங்கோடு"

தமிழ்சஞ்சிகைத்துறைக்கு புதிய முனைவை காட்டிய எங்கள் உள்ளத்தில் பெருமையுடன் வீற்றிருக்கும் "கலகி" எம் மண்ணின் தமிழுக்கு தரும் சான்றிதழ் இதோ:

'பேசுகிற தமிழிலும் இனிமை உண்டு... ஆனால் இனிமையை பூரணமாக அனுபவிக்க வேண்டுமானால் யாழ்ப்பாணத்துக்கு செல்லுங்கள் என்று சொல்லுவேன்''

—பொன்னியின் புதல்வர் சுந்தா

கருத்துக் கருவூலமாக சுடரை, செவ்வந்தியை, சிரித்திரனை, மல்லிகையை நாம் மிகவும் கவனமாக வளர்த்துவரும் காலை, இடையே உங்கள் சந்திப்புகள், மகிழ்வைத்தரும். கருத்துள்ள மிகச்சிறந்த இலக்கிய பரிமாற்றங்களைத் தரும் என ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கையில் நீங்களோ தரமுள்ள இலக்கியத்திற்கும் உங்களுக்கும் இடையே நீண்ட இடைவெளியை உருவாக்கிக் கொண்டு எம்மிடையே கடையை பரப்பியுள்ளீர்கள். உங்கள் பந்தயங்கள் தமிழகத்தில் ஓருவளர்ச்சியை காட்டலாம். ஆனால் ஈழத் தமிழருக்கோ அவை தாக்கங்கள்.

உங்கள் கவர்ச்சியின், தாக்கங்கள் எம் தமிழ் சமுதாயத்தின் பண்பு நிலையை கெடுக்கும் சாதனமாகியுள்ளது என்ற அப்பட்டமான உண்மை மனவேதனையுடன் கூறத்தான் வேண்டும்.

ஓர் எல்லைக்குள், தமிழகத்தில் நின்று கொண்டு எந்தக் கோலமானாலும் வரையமுடியும். காரணம் 'தமிழ் நாடு' என்ற உருவம் உண்டு. இங்கு நாமோ இழந்த எல்லைகளை மீட்க போராடுகின்றோம். காப்பாற்ற போராடுகின்றோம். அம் மீட்பு பணியில் ஈடுபட சமுதாயத்தை தட்டி யெழுப்பக் கூடிய நற்கருத்துகளை இலக்கிய ஆக்கமாக படைக்க முன்னிற்கிறோம். அப்படிப்பட்ட உணர்வுகளை ஊட்டும் படைப்புகளைத்தான் நம் வாசகர்களும் விரும்புகின்றார்கள்.

"தமிழக எழுத்தாளரினதும் நூல்களையும் படியுங்களேன். என்றால் இன்றைய இளம் தலைமுறை என்ன சொல்கின்றது தெரியுமா? அந்தஅலம்பல் நூலகளை எவர் வாசிப்பது?... ஈழத்து எழுத்தாளன் போல் சுருக்கமாக, சுவையாக எழுத யாரால் முடியும்? என்கின்றனர்... கேட்க பெருமையாக இருக்கின்றது.

—இரவின் முடிவு ஆகிரியர் உரையில் "செங்கை ஆழியன்"

எம்மவர் சொல்கின்றார் என்று நினையாதீர்கள். எம் நாவலாசிரியர்களின் விமர்சன பார்வைகள் தமிழக எழுத்தாளர்களின் விமர்சனத்தை விட ஆழமாகவும் விரிவாகவும் இருப்பதை நாம் காணலாம், ஒரு "குமாரபுரம்" 'நிலக்கிளி' வாடைக்காற்று, போன்றவற்றில் தனித்தன்மை வீசும் மண் வாசனை எந்த ஒரு இலக்கிய ரசிகனையும் மகிழ்ச்சியிலாழ்த்தி, புதிய கண்ணோட்டங்களை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை,

எமது எழுத்தாளர்களின் விமர்சனப் பார்வையை தமிழக அசோகமித்திரன் 'மல்லிகை (1977—மார்ச்)க்கு அளித்த போட்டியில் மனம் திறந்து பாராட்டுவதுடன் கூடவே"...இத்தகைய நிலையில் அங்கு ஆழமான விமர்சனப் பார்வையை எதிர் பார்ப்பது இலகுவல்ல என கூறுகின்றார்.

அண்மைக் காலங்களில் பொதுவாகவே தமிழகத்தின் சாயல் (Image) பல நிலைகளிலும் தாழ்ந்து கொண்டு போவதை வெளிநின்று பார்க்கும் எம்மால்தான் உணர முடிகின்றது. அதன் தாக்கம் எம்மையும் தலைகுனியும் படி செய்துள்ளது.

தனக்கென இருக்கும் ஓர் உயர்ந்த நிலை பண்புச்சாயலை நீங்கள் இழக்கும் பொழுது அதன் பிரதிபலிப்பு பயங்கரமானதாக இருக்கும் என்பதை உணரத் தவறாதீர்கள்.

கால வெள்ளத்துடன் நாம் எதிர் நீச்சல் போட முடியாவிடிலும், இருக்கும் இடத்தையாவது காப்பாற்றிக் கொள்ளவேண்டும். இல்லாவிடில் வெள்ளத்தில் அள்ளப்பட்டுச் செல்லவேண்டிய நிலைமையே,

மிகத்தரமான படைப்புக்களை சஞ்சிகைகளாக எம்மவர்கள் கடந்தகாலங்களில் வெளியிட்டார்கள். உதயம், கலைச்செல்வி, மலர்விழி, விவேகி, தமிழின்பம். போன்றவை ஏன் மறைந்தன என இன்று நான் என்னையே கேட்கையில் அன்று விளங்காத விடை இன்று வெளியாகின்றது.

ஒன்று— அன்றைய கால உங்கள் தரமான இலக்கிய படைப்புகள், இரண்டாவது மிகக் குறைந்த விலையில் கிடைக்கப்பெற்ற தமிழக சஞ்சிகைகள், நூல்கள்.

இன்று இரண்டுமே தலைகீழாகிவிட்டன.

காரணம், இளமை புதுமை, இனிமை யென தாத்தாக்கள் பந்தயம்பிடிப்பது. ஓடி விளையாடும் தாத்தாக்கள், அங்கேயே ஓடி விளையாடட்டும்.

இங்கே நாம் தினம் சொல்லும் பாதைகளோபள்ளமும் குழிகளும் நிறைந்தவை. அவற்றை நிரவும் வேலையில் இலக்கியத்தையும் ஓர் ஆயுதமாக பாவிக்கின்றோம். நம் பாதையில் செல்ல தனி ஆற்றல் தேவை.

அந்த ஆற்றலைப் பெற தமிழன்னையிடம் இறைஞ்சுகின்றோம்;


### சமய, சமூக நடுநிலையம்
### 281, டீன் வழி
### கொழும்பு-10

### பதவி வெற்றிடங்கள்

1. திட்ட ஒருங்கிணைப்பாளர்;

ஆய்வு. நூல் வெளியீடு ஆகியவற்றில் போதிய அனுபவமுள்ள பட்டதாரித் தமிழ் எழுத்தாளர் விரும்பப்படுவர்.

2. ஆய்வாளர்;

சமய, சமூக. பொருளாதாரத்துறையில் ஆய்வுப்பணியில் ஆர்வமுள்ள இளம் தமிழ்ப் பட்டதாரிக்கு முதலிடமுண்டு.

3. மொழி பெயர்ப்பாளர்கள்;

சிங்களம் அல்லது ஆங்கிலத்தை அல்லது இருமொழிகளையும் தமிழாக்கம் செய்யும் திறம் படைத்தோருக்கு வரவேற்புண்டு. இது பகுதி நேரப்பணியாகும். தகைமைக்குப் பொருத்தமான நிவேதனம் வழங்கப்படும்.

சகல விபரங்களுமடங்கிய பத்திரப் பிரதிகளுடன் ஆங்கிலத்தில் கடித மூலம் நடுநிலைச் செயலாளருக்கு, மார்ச் 30ம் தேதிக்கு முன் விண்ணப்பிக்குக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வா நினைவுக் கூட்டங்களில் உரையாற்ற முத்தமிழ்க்காவலர் விசுவநாதம் வருகிறார்!

## எம்.ஜி.ஆர், கருணாநிதி, ம. பொ. சி. குமரி ஆனந்தன் ஆகியோர்க்கும் அழைப்பு!

எதிர்வரும் மார்ச் 31ம் திகதிமுதல் எப்ரல் 26ம் திகதி வரை தமிழீழ மடங்கும் மூதறிஞர் தந்தை செல்வா நினைவுக் கூட்டங்களை நடத்துவதற்கு தந்தை செல்வா அறங்காவல் குழு தீர்மானித்துள்ளது. இக்கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்காக தந்தைசெல்வாவின் நெருங்கிய நண்பரும் பேரறிஞரும் முத்தமிழ்க் காவலருமான திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் இலங்கை வருகிறார்.

இதேபோல, திமுகதலைவரும் தமிழ்நாடு எதிர்கட்சித்தலைவருமான கலைஞர் மு. கருணாநிதி, தமிழ் நாடு முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன், தமிழரசுக் கழகத்தலைவர் ம. பொ. சிவஞானம், ஜனதாகட்சி பா. உ. திரு. குமரி ஆனந்தன், ஆகியோரையும் இங்கு வருவிக்க ஏற்பாடுகள் நடப்பதாகத் தெரிகிறது.

தந்தை செல்வாவின் பிறந்த நாள், 31-3-1978, வெள்ளிக்கிழமையன்று மிகவும் விமரிசையாக, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், பொத்துவில் ஆகிய இடங்களில் கொண்டாடப்படும். இவ்விடங்களில் அன்று மாலை பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள் நடைபெற அவ்வப்பகுதிப் பா. உக்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

அன்றையதினம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில், தந்தை செல்வா நினைவகத்திற்காக ஒரு வீட்டிற்கு ஒரு ரூபாய் நிதி சேகரிக்கப்படும். ஒவ்வொரு தொகுதியிலும் அவ்வத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் நிதி சேகரிப்புக்குழு அமைக்கப்படும். தமிழ் இளைஞர்பேரவை, தமிழ் மகளிர் பேரவை உறுப்பினர்களுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களும் பிறரும் இந்நிதி சேகரிப்பில் ஈடுபடுவார்கள். 9-3-1978 அன்று கொழும்பில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுக்கூட்டத்தில் இவ்விஷயம் மிக விபரமாகஎடுத்து ஆலோசிக்கப்பட்டது. பா. உக்கள் மிகத் தீவிரமாக நிதிசேகரிப்பில் ஈடுபடுவது எனத்தீர்மானிக்கப்பட்டது.

தந்தை செல்வா நினைவகத்திற்கான கட்டட ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். டெண்டர் முறை மூலம் நடைபெற்ற இத்தெரிவிற் கமைய, விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். கட்டடக் கலைஞர் வி. எஸ். துரைராஜா இவ்வாரம் துபாயில் தங்கியிருக்கிறார். 15-3-78 அன்று அவர் நாடு திரும்பியதும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் வேலைகள் தொடங்கப்படும். முதல் கட்ட, கட்டடப்பணிகள் தந்தை செல்வா அமரரான முதல் நினைவு நாளன்று முடிவடைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பள்ளமாக உள்ள காணியை மணல் போட்டு நிரப்புவது, அத்திவாரம் வெட்டி கீழ் மட்ட வேலைகளை முடித்துத் தூண் எழுப்புவது என்பன தொடர்பான பணிகள் முதல் கட்ட வேலைகளாக அமையும். இதற்கு எழுபத்தையாயிரம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு தொழிற்படும் ஒப்பந்தக்காரர்கள், தெரிவு செய்யப்பட்டுள்ளதால் பணிகள் விரைவாக நடைபெறும் என எதிர்பார்க்கலாம்.

திரு. ஆர். ஆர். திவாகர், என்னும் பேரறிஞர் தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவாற்ற இசைந்துள்ளார்கள். இந்தியாவில் உள்ள காந்தி அமைதி நிறுவனத்தைச் சேர்ந்த இவர் தமது இசைவைக் கடித மூலம்பேராசிரியர்நேசையா அவர்கட்கு எழுதியுள்ளார்கள். காந்தியடிகளின் சமுதாயத்தத்துவம்எனும்தலைப்பில் நினைவுச் சொற்பொழிவுகள் அமையும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் இச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படலாம்என எதிர்பார்க்கப்படுகிறது.

மார்ச் 31 தொடக்கம் ஏப்ரல் 26 வரை உள்ள 27 நாட்கள் தந்தை செல்வா நினைவு நாட்களாகக் கொண்டாடப்படும். இந்நாட்களில் தமிழ் ஈழமெங்கும் நினைவு நிகழ்ச்சிகள் நடைபெறும். இந்நிகழ்ச்சிகளில் தமிழ் நாட்டு அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு. தமிழர் அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இசைந்துள்ளார்கள். இதற்காக ஒருவார காலம் தமிழர் வாழும் பகுதிகளில் நடைபெறும் நினைவுக்கூட்டங்களில் சொற்பொழிவாற்ற இசைந்துள்ளார்கள் — பிற அறிஞர்களுடனும், தலைவர்களுடனும் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவர்களின் இசைவு தெரிந்ததும் அறிவிக்கப்படும்.

1935 தொடக்கம் 1977 வரையுள்ள தமிழ்ஈழ அரசியல் வரலாறு எழுதப்படுவதற்கு அறங்காவற்குழு முயற்சிஎடுத்துவருகின்றது. தமிழர்களான வரலாற்று ஆசிரியர்கள் பலருடன் பேராசிரியர் நேசையா தொடர்பு கொண்டு வருகின்றார்கள். இவ்வரலாற்று ஆசிரியர்கள் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் உள்ளனர். அண்மையில் இங்கு வந்துபங்கர் நினைவுச்சொற்பொழிவாற்றியவரும் அவுஸ்திரேலியபல்கலைக் கழகத்தின் பேராசிரியராக உள்ளவருமான டாக்டர் அரசரெத்தினம் அவர்கள் இந்நூலின் தொகுப்பு ஆசிரியராக நியமிக்கப்படலாம்.

---

## இராஜ மனோகரன் கட்டுரைக்கு . .

—3-ம்பக்கத் தொடர்

கருணாநிதியின் பேச்சையும், அதேபோல் தனிவிருந்தில் பேசிய எம். ஜி. ஆரின் பேச்சையும் எடுத்துத் தந்துள்ள மனோகரன், 17-12-77ல் அமைச்சர் இராஜா முகம்மது மாநாட்டு மேடையிலேயே தெரிவித்த ஒரு செய்தியை ஏனோ குறிப்பிடவில்லை. "1974ல் உலகத் தமிழ் மாநாட்டின் போது ஒன்பது தமிழர்களை யாழ்ப்பாணத்திலே சுட்டுக் கொன்று விட்டு இந்தியாவுக்கு வந்த சிறிமாவோ அம்மையாரை அந்நாள் முதல்வர் திரு. கருணாநிதி ஓடோடிச் சென்று வரவேற்றார்; அப்போது அவருடைய கட்சியில் இருந்த நாங்களெல்லாம் வேண்டாம் என்று எவ்வளவோ சொல்லியும் கருணாநிதி கேட்கவில்லை.!" இது ஒன்றும் தனியே ரகசியமாகச் சொன்னதல்ல; மாநாட்டு மேடையிலேயே ஓர் அமைச்சர் பேசியது. இப்படிப்பட்ட உண்மைகளை மறைப்பதால் ஈழத்துத் தமிழர்கள் இங்குள்ளவர்களைப் பற்றித் தவறாக எடைபோட்டு ஏமாந்துபோக இடம் ஏற்படுகிறது.

அப்பால்,— ஈழத் தமிழர் பிரச்சினையை இந்தியத் தமிழகத்தில் எடுத்துச் சொல்லவில்லை என்று, இங்குள்ள எழுத்தாளர்களை எல்லாம் "முதுகெலும்பு இல்லாதவர்கள்" என்று ஒரு மொத்தமாகக் 'கில்லட்டின்'போட்டு வெட்டித் தள்ளிவிட்டார் மனோகரன். தமிழகம் என்றாலே, இவருக்குத் தி. மு. க. வும் இங்குள்ள 'பிரபல' தமிழ் இதழ்களும்தான் நினைவு வருவதாகத் தோன்றுகிறது.

ஈழத் தமிழகத்துக்கும் இந்தியத் தமிழகத்துக்கும் உள்ள உறவை நினைக்கும் போது ஈழத்தார் மறந்துவிடவே கூடாதவர்கள் இரண்டுபேர் உண்டு; ஒருவர் இரா. ஜனார்த்தனம்; மற்றவர் சாலை இளந்திரையன். இந்த இருவர் பெயரும் இல்லாமல் (இக்காலத்து) ஈழ, இந்தியத் தொடர்பு பற்றிப் பேசுவது குறையுடைய பேச்சே. (இதை நானே எழுதுவது சிறிது சங்கடமாகத்தான் இருக்கிறது; ஆனாலும், எங்கள் நாட்டுப் பார்ப்பனீயப் பாணியில், நமது ஈழத் தமிழர்களும் இருட்டடிப்புத் திருப்பணியில் இறங்கி விடும்போது, நான் மிகுந்த வாட்டத்தோடு இதைச் சுட்டிக்காட்டவே வேண்டியுள்ளது.)

தனது கட்சியான தி.மு.க. தலைமையின் வெறுப்பையும் தேடிக்கொண்டு ஈழத்தமிழர்களுக்காகக் குரல்கொடுத்தவர் டாக்டர் ஜனார்த்தனம், அதேபோல், ஈழத் தமிழ் இலக்கியத்தை இங்கே வெளியிட்டும், தமது இலக்கிய மதிப்பீடுகளிலெல்லாம் ஈழத்து இலக்கியத்துக்கு உரிய மதிப்பளித்தும் வருபவர் சாலை இளந்திரையன், இன்றைக்கும் ஈழத்துப் பிரச்சினைகளைப் பற்றி இவர் எழுதும்செய்திகளைத்தி.மு.க. இதழ்களும் பிரபல வியாபார இதழ்களும் மட்டுமே வெளியிடுவதில்லை; மற்றைய இதழ்கள் மூலம், இவர் ஈழத்துப் பிரச்சினையை எடுத்து விளக்கியே வருகிறார்.

இதை எல்லாம் தெரிந்து மனோகரன் குறிப்பிட்டிருந்தால், ஈழத்தமிழர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். வெறும் அவல ஓலங்களையே எழுப்புவதில் எந்தப் பயனும் இல்லை.

நேரில்வந்துகண்டமாநாட்டைப் பற்றித் திரு. மனோகரன் இன்னும் சிறிது ஆழமாகச் சிந்தித்திருக்கவேண்டும்; தமிழகத் தலைநகரில் தமிழர்களால் நடத்தப்பட்ட உ. த. ப. இயக்க மாநாட்டில் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த திரு. மு. கருணாநிதியும் திரு. எம். ஜி. இராமச்சந்திரனும் ஏன் கலந்து கொள்ளவில்லை. தமிழுக்காகவும்தமிழருக்காகவும் 'ஓகோ' என்று எப்போதாவது சத்தம்போடும் இவர்கள் இந்த உலகத் தமிழ் மேடைக்கு வந்திருக்கவேண்டாமா?... உலகத் தமிழர் பேரால் நடந்த ஒரு நிகழ்ச்சியை மிக மிக எளியவர்களே நடத்தியிருந்தாலும். — உண்மையான தமிழ்க் காதலர்களாக இருந்திருந்தால், இவர்கள்ஓடோடி வந்திருக்க வேண்டாமா.

இந்தக்கேள்விகளைஎழுப்பாமல், வேறுயார் யார் மீதோ அனல் கக்கியுள்ளார் மனோகரன். இவைகளை எழுப்பியிருந்தால் மாநாட்டுஅமைப்பாளர்களே இவருக்கு அரசியல்வாதிகளின் போலித்தனத்தை விளக்கிச்சொல்லியிருப்பார்கள். உலகத்தமிழர் இயக்கத்தைக்கூட தங்கள் கட்சி அளவாகச் சுருக்கி விடமுயலும்கொடுமையைச் சொல்லி இருப்பார்கள். முன்பு ஒருமுறை பண்பாட்டு விழாவுக்குத் திட்டமிட்டு அரசியல்வாதிகளால் வஞ்சிக்கப்பட்ட சாலை இளந்திரையனிடமாவது இவர் கேட்டிருக்க வேண்டும்.

மாநாட்டுக்கு வந்த ஒருவர் (மனோகரன்தான் என்று நினைக்கிறேன்.) "டாக்டர் ஜனார்த்தனம் ஈழத்தமிழர் பிரச்சினையைச் சொல்லிப் பணம் சம்பாதிப்பதாகச் சொல்லுகிறார்களே, உண்மையா?" என்று என்னிடம் கேட்டார். தங்களுக்குத் தொண்டு செய்கிறவர்களையே துண்டுதுண்டாகக் கிழித்து எறியும் கழுதைப் புலியின் இனம் படைத்தவர்கள், இன்றைய வீழ்ச்சியுற்ற தமிழர்கள். அவர்கள் மனோகரன் போன்ற இளைஞர்களிடம் இப்படிப்பட்ட தவறான செய்தியைப் பரப்பிவிட்டார்களே என்று வேதனைப்பட்டேன். டாக்டர் ஜனார்த்தனம் தி. மு. க.விலிருந்து விலகி விட்டதால், இப்படி ஒரு திட்டமிட்ட பிரச்சாரம் தொடங்கியுள்ளதோ என்றும், அய்யுற்றேன்.

இவருடைய கட்டுரை, வழக்கமான ஒரு பயணக் கட்டுரையாக இருந்தால், அது மேலோட்டமானதாகவும் விடுபாடுகள் உள்ளதாகவும் இருப்பது பற்றி நாம் அக்கறைப்பட வேண்டியதில்லை. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாடு தொடர்பாக, இந்திய—ஈழ உறவுகளை மதிப்பிடுவதால், இந்தக் கட்டுரை இன்னும் சற்று நிதானத்துடனும் ஆழமாகவும் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம்.

அன்புடன்,

முனைவர் சாலை இளந்திரையன்

---

சன்சயின்
சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
- இது ஓர் லாலா தயாரிப்பு -
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

---

### உடுப்பிட்டித் தொகுதி தமிழ் இளைஞர் பேரவை

பேரவையின் மத்தியகுழு அமைப்புக்கூட்டம் 18-3-78 சனிக்கிழமை மாலை 5மணியளவில் நெல்லியடி மத்திய கல்லூரி வீதியில் உள்ள (முன்னைய) த. வி. கூட்டணி மத்திய செயலகத்தில் நடைபெறும். பேரவையில் உறுப்பினராக புதிதாக சேர விரும்புவோர் அமைப்பாளரிடம் பெயர்களைப் பதிவு செய்த பின்னர் கூட்டத்தில் பங்குபற்றலாம். முகவரி:- ச. செந்துராசா, துன்னாலை வடக்கு, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரப்படுத்தல் நீக்கத்தால் சிங்களவர்களின் உரிமைகளே அபகரிக்கப்படுகிறதாம்!

## உரிமை இழந்தவர்களாக தமிழர்கள் பாசாங்கு செய்கிருர்களாம்!

"பல்கலைக்கழகப் பிரவேசத்தில் தரப்படுத்தல் ஒழிப்பால் சிங்கள மாணவர்கள் அந்தகாரத்தில்" என்ற தலைப்பில் 'சிறீலங்கா' பௌத்த முன்னணியாலும் விகாராதிபதிகள் சம்மேளனத்திஞலும் கூட்டாக சிங்களத்தில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றின் தமிழாக்கம் இது:

"எம் குழந்தைகளே!
மாணவ மணிகளே!
பெற்ருேர்களே!

சிங்களராகிய எமக்கு—

* போதிய அளவு பூரணத்துவம் பெற்ற சிங்களப்பாடசாலைகள் இல்லை.

* தேவையான அளவு விஞ்ஞான நூல்கள் சிங்கள மொழியில் இல்லை.

* விடைத் தாள்களைப் பரிசீலிக்கையில் இனவாத முறையில் தகாத சலுகைகள் அளிக்கப்படுவதில்லை.

பதவிக்கு வரும் அனைத்துக் கட்சிகளும் அநியாயமான முறையில் ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்வதால் ஒழுங்கான கல்வி கிடைப்பதில்லை.

தமிழர் பிரதேசங்களுக்கு-

● தேவையான அளவு பூரணத்துவம் உள்ள தமிழ்க் கல்லூரிகள்.

● ஏழுகோடி உலகத் தமிழ் மக்களுக்காக வெளியாகும் கட்டுப்பாடற்ற அறிவியல் நூல்கள்.

● தமிழ் மொழிமூல விடைத்தாள்களைத் திருத்துகையில் பரிசோதகர்கள் வழங்கும் விசேட சலுகைகள்.

● அரசியல்ரீதியாக தமிழர் ஐக்கிய முன்னணியை ஆதரிப்பதால் இவ்வாருன இடமாற்றங்களுக்கு இடம் இல்லை.

இவ்வாருன நிலையில் பல்கலைக்கழகப் பிரவேசத்தில் மொழிவாரியான தரப்படுத்தலை நீக்குதல் உயர்கல்வியைச் சிங்களச் சிறுவர்கள் பெருது தடுக்கும் அநியாயச் செயலாகும்! பல்கலைக்கழக வளாகக் கதவுகள் சிங்களச் சிறுவர்களைப் பொறுத்தவரையில் மூடப்பட்டதற்கொப்பாகும்.

இனவாதிகளின் தூண்டுதல் காரணமாக தமிழ் மாணவர்களுக்கு அதிக புள்ளி அதிக சலுகைகள், அதிக உரிமைகள் அநியாயமான முறையில் அளிக்கப்பட்டுவரும் இச்சந்தர்ப்பத்தில்...

அனைத்திலங்கை மக்களினதும் தேசிய செல்வத்தால் அளிக்கப்படும் இலவசக்கல்வியை சனத்தொகையின் ஒரு சிறு பகுதியினரான தமிழர்கள் மட்டும் அடைவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ள இவ்வேளையில்.

ஸ்ரீலங்கா பல்கலைக்கழகத்தில் பரவலான முறையில் தமிழ்வைத்தியர்கள், தமிழ் பொறியியலாளர்கள், தமிழ் விஞ்ஞானிகள் எனத்தமிழ் அறிவியலாளரை மட்டுமே உருவாக்க முனைந்துள்ள இந்த துக்ககரமான வேலையில்...

அருமைத் தாய்மாரே! தந்தையரே! உங்கள் குழந்தைக்குப் பல்கலைக்கழகப்பிரவேசம் கிட்டுமா?

* ஆறுவருடங்களாக சிங்கள இனத்துக்கு அவர்களுக்குரிய உயர் பதவிகள் கிடைக்காமைக்கு காரணம் என்ன? அனுமதி கிடைக்கிறது. இப்படியிருக்க சிங்களவருக்கு நியமனம் கிடைக்கக் கூடிய விதத்தில் இருந்த 'தரப்படுத்தல் முறை' இப்பொழுது நீக்கப்பட்டுள்ளது. அப்பாவி சிங்கள மாணவர்களின் எதிர்காலம் பாழடைவதற்கு இடமளிக்கத்தான் வேண்டுமா?

1970ம் ஆண்டு விஞ்ஞானம் கற்பிக்கும் வசதிகளுடனை பாடசாலைகள் சிங்களப் பகுதிகளில் 106ம் தமிழ்ப் பிரதேசத்தில் 30மாக இருந்தவை 1976ல் சிங்களப்பகுதியில் 178ம் தமிழ்பிரதேசத்தில் 57மாக மாறின. 11% தமிழருக்காக 57 பாடசாலைகளென்ருல் எமக்கு 450பாடசாலைகளாவது இருக்கவேண்டாமா? இருநூறு தன்னும் இல்லாத வேளையில் உண்மை பொதுமக்களின் பணம் என்பது உண்மையாஞல் இப்படியான இழிநிலை எமது சமூகத்துக்கு ஏற்படக்காரணம் என்ன? நமது கவனப்பிசகா? எமது மந்தபுத்தியா? தலைவர்களது காட்டிக்கொடுக்கும் கயமையா? எது எப்படி ஆயினும் இச்செயல் தார்மீகமானது அல்ல! சிங்களவரின் தாயகத்தை மேம்படச் செய்வதஞல் ஒவ்வொரு இனத்துக்கும் விகிதசாரப்படி தரப்படுத்தல் இருந்தே தீர வேண்டும்.

"...முன்னுள் கல்வி அமைச்சர் கரிசனையோடு கொண்டு வந்த 'தரப்படுத்தலை' தார்மீகம் பேசும் இன்றைய அரசு மக்களது அபிப்பிராயத்தை அறியாமல்—அறிஞர்களின் வேண்டுகோளைப் புறக்கணித்து தடைசெய்துள்ளது. பௌத்த தலைவர்களின் சிரேஷ்டரான தற்போதைய கல்விஅமைச்சர் சிறிதும் சிந்தியாமல் பேனையை எடுத்து ஒரே கீருகக் கீறி இத்திட்டத்தை ஒழித்ததன் மர்மந்தான் என்ன? அவர் சூழ்ச்சிக்காரரின் வலையில் வீழ்ந்து விட்டாரா? அல்லது உண்மையில் சிங்கள மக்களின் சுபீட்சத்தில் அவருக்கு கடுகளவேனும் கரிசனை இல்லாததுதான் காரணமா?

1965—70 இடைப்பட்ட காலத்தில்—

ஒரு இலட்சம் சிங்களவர்களுக்கு 14 பேர், ஒரு இலட்சம் தமிழர்களுக்கு 90 பேர் என்ற விகிதப்படி அறிவியல் துறையில் மாணவர்கள் பிரவேசித்துள்ளார்கள். தரப்படுத்தல் அறிமுகமாகியதன்பின் 1973—77காலப் பகுதியில் 4920 சிங்கள மொழியாளருக்கும் 1613 தமிழ் மொழியாளருக்குமே அறிவியல் துறையில் பல்கலைக்கழக பிரவேசம் கிட்டியுள்ளது எனினும்—ஒரு லட்சம் சிங்களருக்கு 54 பேர் ஒரு இலட்சம் தமிழருக்கு 115 பேர் என்ற அடிப்படையிலேயே இதுவும் அமைந்துள்ளது.

இதிலிருந்து புலஞவது என்ன? தரப்படுத்தல் முறை சிங்கள மாணவர்களுக்கு அநுசரணையாக இருந்ததே அன்றி தமிழ் மாணவர்களுக்கு தடையாக இருக்கவே இல்லை. மேலும் இலகுவான பரீட்சை முறை — அதிக அளவில் புள்ளிகளை வழங்குதல் போன்ற ஊழல்களால் தமிழ் மாணவர்கள் பயன் அடைந்தனர். சிங்களவரோ பாதிப்படைந்தனர். எனவே விஞ்ஞானரீதியாக உலகம் ஏற்றுக்கொண்டுள்ள தரப்படுத்தல் முறையினை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்:

ஆசிரியர்களே, மாணவர்களே, பெற்ருேர்களே!

அரசியல் — கட்சி வேறுபாடின்றி ஒரே சிங்கள இனம் என்ற ரீதியில் ஒன்றுபட்டு சிறுபான்மை மக்களின் இனவாதத்தை முறியடியுங்கள். அமைதியாக—இயக்கரீதியாக உங்கள் பாராளுமன்ற உறுப்பினருக்கு சிங்களரின் வேண்டுகோள்களை சமர்ப்பியுங்கள்.

எமது போராட்டம் பெரும்பான்மைமக்களின் போராட்டம்!

நேர்மையை— தர்மத்தை நிலைநிறுத்தற்கான போராட்டம்!"

## அகில இலங்கை பௌத்த காங்கிரசும் விகாராதிபதிகள் சர்மேளனமும் வெளியிட்ட கூட்டறிக்கை!

* உயர் கல்வித்துறையில் சிறுபான்மையினருக்கு சதாகாலமும் கூடுதலான சலுகைகள் வழங்கப்படத்தான் வேண்டுமா?

இவைதான் இன்று நம் மத்தியில் எழுந்துள்ள மாபெரும் பிரச்சினைகள்!

"...ஆண்டாண்டு காலமாக அந்நியா ஆதிக்கத்தின் கீழும் சிறுபான்மையினரது ஆக்கிரமிப்பிஞலும் பாதிப்படைந்துள்ள சிங்களவராகிய எமது பொறுமையை— கருணையை —தயாள குணத்தை தவருக எடை போட்டுமேன்மேலும் நம் சிங்களவரை நசுக்குவதற்கு இடமளிப்பதா? இது எமது நாட்டையும், கலாசாரத்தையும், மக்களையும் அழித்தொழிக்கும் செயலாகும்.

"சுதந்திர இலங்கையில் பெரும்பான்மை இனத்தவராகிய எமக்கு இல்லாத கல்வி வசதிகள் தமிழருக்கு உள்ளன. தற்போது சகல சிங்களவரையும் துரத்திவிட்டு தனியே தமிழர் மட்டும் வாழும் யாழ்ப்பாணத்தில், கொழும்பைவிட மும்மடங்கு பாடசாலை வசதிகள் உள்ளன. அப்பிரதேசம் ஐக்கிய தமிழர் முன்னணியின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அநியாயமான ஆசிரியர் இடமாற்றம் அங்கு இல்லை, எனவே மாணவர்களது கல்வியும் பாதிப்படைவது இல்லை, ஒரே மொழி இருப்பதால் இடநெருக்கடியும் இல்லை. அங்கு அமைதி நிலவுகிறது. ஏழுகோடித்தமிழருக்கென இந்தியாவில் வெளியாகும் அறிவியல் விஞ்ஞான சஞ்சிகைகள் அவர்களுக்குக் கிடைக்கின்றன. அதே போன்று தென்னிந்தியாவில் தமிழ் நாட்டில் எந்தப் பல்கலைக் கழகத்திலும் இவர்களுக்கு இலகுவாக யில் பாதிப்படைபவர்கள் யார்?

இவ்வாருன நிலையில் அதிக சலுகைகள் — உயர் கல்வி வசதிகள் பெற்று இன்றும் உயர்பதவிகளில் இருந்து கொண்டு உரிமை இழந்தோராகப் பாசாங்கு செய்பவர்கள் யார்? உதாரணத்துக்கு இருதுறைகளை ஆராய்வோம்,

### வைத்தியம்

ஒரு இலட்சம் சிங்களவர்களில் வைத்தியர்கள் 16 பேர்.

ஒருலட்சம் முஸ்லீம்களில் வைத்தியர்கள் 7பேர்.

ஒருலட்சம் தமிழர்களில் வைத்தியர்கள் 67பேர்.

### பொறிஇயல்

ஒரு இலட்சம் சிங்களவர்களில் பொறிஇயல் வல்லுனர்கள். 7 பேர்

ஒரு இலட்சம் முஸ்லீம்களில் பொறியியல் வல்லுனர்கள் 4 பேர்,


ஒரு இலட்சம் தமிழர்களில் பொறியியல் வல்லுனர்கள் 43 பேர்.

இப்படியான கேவலமான நிலையால் அல்லவா நமது சிங்களப்பகுதிகளில் கூட தமிழன் வைத்தியனுக — பொறி இயலாளனுக இருக்கின்றுன்.

சிங்களம் மட்டும் சட்டம் என்ன ஆயிற்று! நம்முடைய கலாசாரம் எங்கே அபிவிருத்தி அடையப்போகிறது?

நமது நாடு சுதந்திர நாடென்பது உண்மை என்ருல், கடந்த 34வருடங்[illegible] கச் செலவிடப்பட்டது.

---



## ஆங்கிலக் கல்வி

அதிவிரைவில் தபால் மூலமும், நேரிலும் எழுத, வாசிக்க, பேசப்படிக்க விபரங்களுக்கு எழுதுங்கள்! "ஆங்கிலக் கல்வி", போதஞசிரியர்: ஜோர்ஜ் சேகர், பொரளை கொழும்பு.

---





பாவியுங்கள்

ரோயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்று மோர் தயாரிப்பு

ரோயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

ரோயல் பேக்கிங்பவுடர்
ரோயல் கஸ்டட் பவுடர்
ரோயல் கோண் பிளவர்
ரோயல் பிஸ் மக்ஸ்
ரோயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இண்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● நினைவாஞ்சலி

# வன்னியூர்க் கவிராயர்

ஈழத் தமிழ் அரசியல் உலகில் சென்ற ஆண்டு அடுத்தடுத்து ஏற்பட்ட இழப்புப் போன்றே, இலக்கிய உலகிலும் இவ்வாண்டு ஏற்பட்டுள்ளது வருத்தத்துக்குரியது. கடைசியாக இலக்கிய உலகை விட்டுப் பிரிந்தவர்தாம் 'வன்னியூர்க் கவிராயர்' என்ற புனை பெயருக்குரியவரான திரு. எஸ். எல். சவுந்தரநாயகம் அவர்கள்.

இவர் கவிதை படைப்பதையே தமது உயிர் மூச்சாகக் கொண்டு, ஆயிரக்கணக்கான கவிதைகளை எழுதியும் பலகவியரங்க மேடைகளைச் சிறப்பித்ததோடும் அமையாது சிறுகதைகள், குட்டிக் கதைகள், உருவகக் கதைகள், நடைச் சித்திரங்கள், இலக்கிய வைத்தியக் கட்டுரைகள் என்றும் ஏராளமாக எழுதித் தமக்கு எந்தத்துறையும் கைவரும் என்பதை நிலைநாட்டிச் சென்றிருக்கிறார். 'ஈழத்துக் காவிய தீபகம்' இவரது சிறுகதைத் தொகுதியாகும். கவிதையிலேயே மிக நுட்பமானதும் நுண்ணிய அறிவுகொண்டு புனையப்பெற வேண்டியதுமான சித்திர கவிப் பாவினங்களைச் சேர்ந்த நாகபந்தம், சக்கர பந்தம், தேர்ப்பத்தம் நீரோட்டம் போன்ற புலமை விளையாட்டுக்களில் கவிராயர் ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கினார்.



கவிஞராக இருந்து மக்களின் உளநோய்க்கு மருத்துவம் செய்து வந்த வன்னியூரார், மக்களின் உடல் நோய்க்கு மருத்துவம் புரியும் வைத்தியத்தைத் (சித்த ஆயுர்வேதம்) தமது தொழிலாக வரித்துக்கொண்டிருந்தார். அவரது இந்த இரண்டு மருத்துவத்தாலும் எண்ணற்றோர் ஏற்றம் பெற்றனர் எனலாம்.

கவிஞர் என்றுமே தானுண்டு தன் தொழிலுண்டு என்ற குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்தவரலலர். மக்களை மறந்து வெறும் கற்பனை உலகில் சஞ்சரித்தவருமல்லர். மக்களுக்கு எந்தெந்த வழியிலும் வகையிலும் தொண்டாற்ற முடியுமோ அந்தந்த வழியிலும் தொண்டாற்றியவர் 1963-ஆம் ஆண்டிலிருந்து ஆறு ஆண்டுகள் சின்னச் செட்டிகுளம் கிழக்கு கிராம சபையின் உறுப்பினராகவும், பதில் தலைவராகவும் கடமையாற்றியிருக்கிறார். இது தவிர தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் வளர்ச்சிக்கும், அவரது பகுதியில் அந்த இயக்க உறுப்பினர்கள் பெருவெற்றி பெறவும் இரவு பகலாக உழைத்திருக்கிறார்,

கவிராயரின் பிரிவாற்றாமையால் துயருறும் அன்னாரது குடும்பத்தினரும், வன்னி மக்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, கவிஞரின் ஆன்ம ஈடேற்றத்துக்காகவும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

—பொ. சண்முகநாதன்

மில்க்வைற் செய்தி இதழ் 27

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார்சோப் அல்லது 2 நீம்சோப் அல்லது 2 மெடிக்கேற்றட் அல்லது 2 சலவைப்பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்திலையப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்.

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) 3-வது வாரம்

எம். ஜி. ஆர். (இரு வேடங்களில்)
வாணிஸ்ரீ, நிர்மலா, பி. எஸ். வீரப்பா,
தேங்காய் ஸ்ரீனிவாசன் மற்றும் பலர் நடித்த—
ஊருக்கு உழைப்பவன்



கெயிட்டி [கொட்டாஞ்சேனை] 2-வது வாரம்

எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி நடித்த—
அல்லி பெற்ற பிள்ளை

2-வது வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு)
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா நடித்த
ஜானகி சபதம்

கெப்பிட்டல் (கொழும்பு) 7வது வாரம்-
விஜயா (மட்டுநகர்)
கே. ஆர். விஜயா—ஜெய்சங்கர் நடித்த-
மேயர் மீனாட்சி

வெலிங்டன் (யாழ்நகர்)
பிளாஸா (வெள்ளவத்தை)
சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த—
கிரகப்பிரவேசம் (கலர்)

5-வது வாரம்
(கொழும்பு)
லிடோ (யாழ்நகர்)
முத்துராமன், சுஜாதா, சிவகுமார்
பத்மபிரியா -நடித்த
உறவு சொல்ல ஒருவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. பண்டா[illegible] பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு மார்ச் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது, அச்சுப்பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்